நீதிபதிகளை 'புனிதர்கள்' எனக் கருத வேண்டியதில்லை!

நீதித்துறையிலும் ஊழல் இருப்பதை மறுக்க முடியாது!

கருப்பு திரைப்படம் குறித்து உயர்நீதிமன்ற நீதிபதிகள் அமர்வு அதிரடி கருத்து!

சென்னை, மே.30-

நீதித்துறையில் ஊழல் இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது என்று தெரிவித்துள்ள சென்னைஉயர்நீதிமன்றம், நீதிபதிகளை புனிதர்களாக கருதவேண்டிய அவசியம் இல்லை என்றும் தெரிவித்துள்ளது. நீதித்துறையை அவமதிக்கும் வகையில் எடுக்கப்பட்டுள்ளதாக கூறி கருப்பு திரைப் படத்தை தடைசெய்யக் கோரி, வழக்கறிஞர் தமிழ் வேந்தன் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்து நீதிபதிகள் ஜி.ஆர். சுவாமிநாதன், வி.லட்சுமி நாராயணன் அடங்கிய அமர்வு கடந்த வாரம் உத்தரவிட்டிருந்தது.

கருப்பு திரைப்படத்தின் கதைக்களம்!

அந்த உத்தரவில் நீதிபதிகள், கருப்பு திரைப் படத்தின் கதைக் களம் என்பது ஏழு கிணறு என்ற இடத்தில் அமைந்துள்ள ஒரு நீதிமன்றம். அதில் இருக்கும் தலைமை நீதிபதி ஊழல்வாதியாகவும், தொழில் நெறிமுறையற்ற வழக்கறிஞர் ஒருவர் நீதி மன்றத்தின் செயல்பாடுகள் மீது அளவற்ற அதிகாரத்தைச் செலுத்துவதாக அமைக்கப்பட்டுள்ளது. நீதித்துறையில் ஊழல் இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஊழல் நீதிபதிகள் இருந்தார்கள், இருக்கவும் செய்கிறார்கள். நீதிபதிகளை புனிதமானவர்களாக கருத வேண்டிய அவசியம் இல்லை.

நீதித்துறையில் ஊழல் என்ற கூற்றுகளை நாங்கள் முழுமையாக ஆதரிக்கவில்லை. நீதித்துறை ஊழல் நிகழ்வுகளை அறிவோம், எதிர்கொண்டும் இருக்கிறோம். சென்னை உயர் நீதிமன்றத்தின் முழு அமர்வும் இதுபோன்ற கருப்பு ஆடுகளை தவறாமல் வெளியேற்றிக்கொண்டுதான் இருக்கிறது. வழக்கறிஞர்கள் சங்கத்தின் சில உறுப்பினர்களுக்கு ஊழல்வாதிகளுடன் தொடர்பு இல்லாமல், நீதித் துறையில் ஊழல் நிகழ முடியாது.

ஒரு கலைஞனுக்கான சுதந்திரம் வேண்டும்!

ஊழல்வாதிகளைப் பிடிப்பதற்கும், நிலைமையை உரிய முறையில் கையாளுவதற்கும் உயர் நீதிமன்றத்தின் விழிப்புணர்வு கண்காணிப்பே ஆதாரமாக விளங்குகிறது. எந்தவொரு சிறப்புத் திரையிடலையும் ஏற்பாடு செய்யுமாறு தயாரிப்பாளரிடம் கேட்காமல், கருப்பு படத்தை எங்களில் ஒருவரான நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் பார்த்துள்ளார். ஒரு நெறிமுறையற்ற வழக்கறிஞருக்கும், ஊழல் நீதிபதிக்கும் இடையிலான தீய கூட்டணியை கொண்ட கருப்பு திரைப்படத்தில், நீதித் துறை அமைப்பு மிகைப்படுத்தி சித்தரிக்கப் பட்டுள்ளது என்பது உண்மைதான்.

ஆனால், தமிழில் திரைப் படங்கள் அப்படித்தான் பார்க்கப்படுகின்றன. தன்னைச் சூழ்ந்திருக்கும் டஜன் கணக்கான வில்லன்களை கதாநாயகன் தனி ஒருவனாக வீழ்த்துவான். தமிழ் சினிமாவில் எல்லாமே மிகை உணர்ச்சி கொண்டது. எனவே, 'கருப்பு' படத்தையும் ஒரு தனித்துவமான படைப்பாகவே பார்க்க வேண்டும். எப்படியிருந்தாலும், ஒரு கலைஞன் தனது சொந்த வழியில் தன் படைப்பை வழங்குவதற்கு தரப்பட்ட உரிமையே கலைச் சுதந்திரம் என்று அழைக்கப்படுகிறது.

ஒரு கலைப் படைப்பு முற்றிலும் வேறுபட்டதாரா சில் எடைபோடப்படும். ஒரு கலைஞனுக்கு அதிக செல்வாக்கும் சுதந்திரமும் உண்டு. ஒரு கார்ட்டூனிஸ்டுக்கு எது பொருந்துமோ அது ஒரு திரைப்படத் தயாரிப்பாளருக்கும் பொருந்தும். அவர் வழங்கும் கதையில் மிகைப்படுத்தல் இருக்கும். தவறுகள் இருக்கும். அது முற்றிலும் புனை கதையாகவும் இருக்கலாம் அல்லது ஒரு செய்தியைக் கொண்டிருக்கலாம் அல்லது பொழுதுபோக்குடன் மட்டும் நின்றுவிடலாம். ஒரு கதையை வழங்கும் விதமும், வழங்கும் உள்ளடக்கமும் படைப்பாளியிடமே விடப்பட வேண்டும்.

படைப்பாற்றல் மதிக்கப்பட வேண்டும்!

படைப்பாளி தடை செய்யப்பட்ட பகுதிகளுக்குள் நுழையாத வரை படைப்பாற்றல் மதிக்கப்பட வேண்டும். கருத்து சுதந்திரம் என்பது ஒருவரின் கருத்தை வாய்மொழி, எழுத்து, அச்சு, படம் அல்லது வேறு எந்த வகையிலும் வெளிப்படுத்தும் உரிமை ஆகும். இது தகவல் தொடர்பு சுதந்திரம் மற்றும் கருத்தைப் பரப்புவதற்கான அல்லது வெளியிடுவதற்கான உரிமையையும் உள்ளடக்கும்.

கருப்பு திரைப்படம் நீதிமன்ற அவமதிப்பை உள்ளடக்கியது இல்லை என்ற கருத்தின் அடிப்படையில், தணிக்கைச் சான்றிதழ் வழங்கியிருக்கும்போது நீதிப்பேராணை நீதிமன்றம் அதன் கருத்தை மாற்றியமைக்காது. நாம் இப்போது சமூக ஊடகங்களின் காலத்தில் இருக்கிறோம். ஒரு கொடூரமான கூற்று கூறப்பட்டாலும், அதைப் புறக்கணிப்பதே நல்லது. நீதித்துறைப் பயணம் முன்னோக்கிச் செல்ல வேண்டும். ராமாயணத்தில் ராமனின் அம்பில் சிக்கிய தவளையை போல, நீதிமன்றமே விழிப்புடன் இருக்கும் காவலனாக நிற்கிறது.

நீதிமன்ற அவமதிப்பாக கருத வேண்டியதில்லை!

அது குடிமக்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் எந்தவொரு உத்தரவையும் பிறப்பிக்கக் கூடாது. கருப்பு படத்தின் இயக்குனர் ஆர்.ஜெ.பாலாஜி, கதாநாயகன் சூர்யா, நடிகை திரிஷா ஆகியோர் நீதித் துறை அமைப்பை அவமதித்துள்ளதால், அதை குற்றவியல் நீதிமன்ற அவமதிப்பாகக் கருதி தகுந்த வழிகாட்டுதல்களை வழங்க வேண்டும் என்று மனுதாரர் தமிழ்வேந்தன் தரப்பில் வாதிடப்பட்டாலும் இதை நீதிமன்றம் ஏற்கவில்லை.

ஆர்.கே.நாராயணனின் படைப்புகளில் மால்குடி என்பது ஒரு கற்பனைக் கிராமமாக இருப்பது போலவே, கருப்பு படத்தின் ஏழு கிணறு நீதி மன்றமும் ஒரு கற்பனையானதாகும். ஒரு கற்பனையான நீதிமன்றத்திற்குத் தலைமை தாங்கும் நபர் ஊழல்வாதியாகச் சித்தரிக்கப்படும்போது, அது 1971ம் ஆண்டு நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தில் உள்ள தண்டனை விதிகளின் கீழ் வராது.

அவ்வாறு கற்பனையாக சித்தரிக்கப்பட்ட நீதிமன்றத்தில் ஊழல் என இயக்குநர் கூறியுள்ளாரே தவிர, ஒட்டுமொத்த நீதித்துறை அமைப்பையே ஊழல் நிறைந்ததாகச் சித்தரிக்கவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும். எனவே, கருப்பு படத்தை தடை செய்யக் கோரிய வழக்கில் முகாந்திரம் எதுவும் இல்லை என்பதால் மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என்று உத்தரவிட்டனர்.

'வாட்ஸ் அப்'பில் வலம் வருகிறது!

திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி எம்.பி. அறிவிப்பு!

திருப்பூர், மே 30-

திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம் இன்று (30.05.2026 சனிக் கிழமை) மதியம் 2.00 மணியளவில் காணொளி காட்சி வாயிலாக நடைபெற இருக்கிறது.

அதுசமயம் திருப்பூர் தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மற்றும் சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா நிகழ்ச்சிகள் தொடர்பாக.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தியாகராயர் நகர் கிழக்கு பகுதி

135வது 'அ' வட்ட தி.மு.க. நிர்வாகிகள் கூட்டம்!

வட்டச் செயலாளர் மு. செல்வகுமார் அறிக்கை!

சென்னை, மே 30

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்கு பகுதி, 135வது அ வட்ட தி.மு.க. நிர்வாகிகள் கூட்டம், இன்று (30.05.2026) மாலை 6.00 மணிக்கு அசோக் நகர் 83-வது தெருவில் உள்ள வட்ட கழக அலுவலகத்தில் வட்ட செயலாளர் மு.செல்வகுமார் தலைமையில், தியாகராயர் நகர் கிழக்கு பகுதி பொறுப்பாளர் கோசு மணி முன்னிலையில் நடைபெற உள்ளது.

எனவே 135வது அ வட்ட கழகத்திற்கு உட்பட்ட பகுதி நிர்வாகிகள் வட்டக் கழக முன்னாள், இந்நாள் நிர்வாகிகள் அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் BLA, BDA, பாக இளைஞரணி அமைப்பாளர்கள் மற்றும் ஆற்றல்மிகு செயல்வீரர்கள் வீராங்கனைகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் ஜூன் 3 அன்று 103வது பிறந்தநாள் விழா மற்றும் கழக ஆக்கபணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது என்று வட்டச் செயலாளர் மு.செல்வகுமார் தெரிவித்துள்ளார்.

சென்னை கிழக்கு மாவட்ட தொண்டரணி

எல்.எட்வின் மைத்துனர் ஜெ.சாத்ராக் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, மே 30-

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. தொண்டரணி துணை அமைப்பாளர் எல்.எட்வின் அவர்களுடைய சகோதரி கணவர் ஜெ.சாத்ராக் அவர்கள் நேற்று 29.5.2026 வெள்ளிக்கிழமை மாலை 5.45 மணியளவில் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் மறைவு செய்தியறிந்து கழகத்தினர் மற்றும் உறவினர்கள் அவரது உடலுக்கு மலர் மாலைகள் அணிவித்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அன்னாரின் இறுதிச் சடங்கு எண். 22/1, கிருஷ்ணதாஸ் ரோடு, 3-வது தெரு, மங்களபுரம், பெரம்பூரிலிருந்து புறப்பட்டு மதியம் 2 மணியளவில் கீழ்ப்பாக்கம் கல்லறையில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

பல்கலை வேந்தராக முதலமைச்சர்தான் இருக்க வேண்டும் என்பது அவசியம் இல்லையாம்!

த.வெ.க. அரசு உயர்கல்வித் துறை அமைச்சர் பேசுவது, வன்மையான கண்டனத்திற்குரியது!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, மே 30-

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலமும் பெறாத ராக்கெட் வேகக் கல்வி வளர்ச்சியைத் பெற்றுள்ள தமிழ்நாட்டில், பல்கலைக் கழகங்களுக்கு வேந்தராக ஆளுநரே இருக்கலாமாம்; முதலமைச்சர்தான் இருக்க வேண்டும் என்பது அவசியம் இல்லையாம்! தமிழ் நாட்டுக் கல்விப் புரட்சி வரலாறு தெரியாமல், உயர் கல்வித் துறை அமைச்சர் இப்படிப் பேசுவது, வன்மையான கண்டனத்திற்குரியது! கல்வித் துறை பற்றிய திட்டவட்ட கொள்கை நிலைப்பாட்டை தாமதிக் காமல் அறிவிக்கவேண்டியது அவசர, அவசியமாகும் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார். அவரது அறிக்கை வருமாறு:

புதிதாக அமைந்துள்ள முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் கட்சி தனிப்பெரும்பான்மை இல்லாவிடினும், அதிக இடங்களில் வெற்றி பெற்றிருந்த நிலையில், "ஆட்சியில் அதிகாரத்தில் பங்கு" என்ற பேரவாவுடன், புதிய ஆட்சி அமைவதற்கு முன்பிருந்தே ரகசியத் தொடர்புகளைப் பேணி வந்த காங்கிரஸ் கட்சி, பின்னர், தி.மு.க.வுடன் இருந்த கூட்டணியை வெளிப்படையாக முறித்துக்கொண்டது.

வடநாட்டிலிருந்து வந்த காங்கிரஸின் ஒருங்கிணைப் பாளர் ஒருவரும், இந்த உள் விவகாரங்களைத் தொடர்கம் முதல் கவனித்து வந்த பிரவீன் சக்ரவர்த்தி மற்றும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் உள்ளிட்டோரும் த.வெ.க. கட்சியின் அலுவலகத்திற்கு ஓடோடிச் சென்று கூட்டணியில் இணைந்து, ஆதரவு தந்தது. மேலும், இந்தத் கூட்டணி இப்போது மட்டுமல்லாமல், வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தலிலும், அதற்குப் பிறகும்கூட தொடரும் என்று காங்கிரஸ் கட்சி தானாகவே அறிவித்தது.

தங்களது சுயநலப் போக்கை!

இதற்கான முயற்சிகளை மேற்கொண்டவர்களில் ஒருவர், முன்பு தி.மு.க. கூட்டணி என்பது "கொள்கைக் கூட்டணி" என்று கூறிவந்தார். ஆனால் இப்போது அதற்கு முற்றிலும் மாறாக, "அது வெறும் தேர்தல் கூட்டணிதான்; தேர்தல் கூட்டணி மட்டும்தான்" என்று கூறி தங்களது தன்மையைக் காட்டிக் கொண்டனர்.

தி.மு.க. தலைமையில் உள்ள கூட்டணியில் போட்டியிட்டு, காங்கிரஸ் கட்சி சார்பில் வெற்றி பெற்ற அய்ந்து சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவைக் கொடுத்து, இரண்டு அமைச்சர் பதவிகளைப் பெற்றுள்ளனர்.

அதைப் பெற்றுப் பொறுப்பேற்ற காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் விசுவநாதன் அவர்கள், செய்தியாளர்கள் சந்திப்பில், எடுத்த எடுப்பிலேயே, "முந்தைய அரசின் கொள்கைகளை நாங்கள் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. பல்கலைக் கழகங்களுக்கு வேந்தராக ஆளுநரே இருக்கலாம்; முதலமைச்சர்தான் இருக்கவேண்டும் என்பது அவசியம் இல்லை. ஆளுநருடன் ஒத்துப் போவதுதான் சரி" என்ற கருத்தில் செய்தியாளர்களிடம் பேசியுள்ளார்.

அதனால், பலரது கேள்விகளுக்கு அவர் பதிலளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

கல்வித்துறையில் ஓர் அமைதிப் புரட்சியை ஏற்படுத்திய தமிழ்நாடு!

'உயர்கல்வித் துறை' என்பது, உயர் கல்விக்கான துறையாக மட்டுமல்லாமல், கல்வி நிலையைத் தமிழ் நாட்டில் உயர்த்திய துறையாகவும் அமைந்ததுதான் தமிழ்நாட்டின் சிறப்பு! இந்நாட்டின் பெரும்பாலான மக்கள் ஒடுக்கப்பட்டு, வாய்ப்பு மறுக்கப்பட்டு, மனுதர்மம் கோலோச்சிய நாட்டில், குலதர்மக் கல்வி கொண்டு வந்து திணிக்கப் பட்ட வரலாற்றை மாற்றியமைத்தது, காமராசரின் கல்விப் புரட்சி. அதை மேலும் பெருக்கிய அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் 'திராவிட மாடல்' ஆட்சியின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் ஆட்சிகளில், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலமும் பெறாத ராக்கெட் வேகக் கல்வி வளர்ச்சியைத் தமிழ்நாடு பெற்றுள்ளது. எல்லா மாவட்டங்களிலும் பல்கலைக்கழகங்கள், உயர்படிப்புகள் என கல்வித்துறையில் ஓர் அமைதிப் புரட்சியை இவர்கள் ஏற்படுத்தியுள்ளனர்.

தமிழ்நாட்டில் ஓர் ஆளுநரின் ஒத்துழையாமையையும் தாண்டிப் பல்வேறு சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. பல்கலைக்கழகங்களில் ஆர்.எஸ்.எஸ். கொள்கைகளைத் திணிக்கும் ஆளுநரின் முயற்சிகளுக்குக் கடுமையான எதிர்ப்புகள் கிளம்பின. இந்த நிலையில், சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை ஆளுநர் காலவரையறை இன்றி நிறுத்தி வைப்பதைக் கண்டித்து உச்ச நீதிமன்றத்தில் சட்டப் போராட்டம் நடத்தப்பட்டது. ''மசோதாக்களை ஆளுநர் காலவரையற்று நிறுத்தி வைத்து, ஊறுகாய் ஜாடியில் ஊற வைக்கக் கூடாது'' என்று நீதிமன்றமே சுட்டிக்காட்டும் அளவுக்குத் தமிழ்நாடு ஒரு பெரிய வரலாற்றை உருவாக்கியுள்ளது.

திட்டமிட்டுக் காலதாமதம்!

ஒன்றியத்தில் உள்ள பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். அரசு, உச்ச நீதிமன்றத் தீர்ப்பை மறுக்க முடியாத தால் குறுக்கு வழியைக் கையாண்டது. இதன்படி, குடியரசுத் தலைவர் மூலமாக உச்ச நீதிமன்றத்திடம், 'கருத்துரை' என்ற பெயரில் ஒரு திட்டத்தைச் சமர்ப்பித்து, திட்டமிட்டுக் கால தாமதத்தை ஏற்படுத்தியது.

தமிழ்நாட்டில் உள்ள 11 பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்கள் நியமிக்கப்படாமல் இருக்கும் தற்போதைய சூழ்நிலை, உயர் கல்வியில் தமிழ்நாடு அடைந்துள்ள 'திராவிட மாடல்' ஆட்சியின் இமாலயச் சாதனைகளை மறைக்கும் வகையில், கல்விக் கண்களைக் குத்தும் முயற்சியில் ஈடுபடக்கூடாது. மாநில உரிமைகளை எக்காரணம் கொண்டும் விட்டுக்கொடுக்கக் கூடாது. அதேநேரத்தில், ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.வின் மனுதர்மக் கண்ணோட்டத்துடனான கல்வித் திணிப்பு முயற்சிகளைத் தடுத்து நிறுத்த வேண்டிய மிக முக்கியமானதொரு காலகட்டத்தில் நாம் இருக்கிறோம்.

இந்தக் கருத்து யாருடைய முடிவு?

ஜோசப் விஜய் தலைமையில் அமைந்த கூட்டணி ஆட்சி, இந்தப் பிரச்சினையில், எப்படி? என்ன நிலைப்பாடு எடுக்கப் போகிறது? ஒன்றிய பா.ஜ.க. அரசின் முட்டுக்கட்டை முயற்சிகளை எப்படி எதிர்கொள்ளப் போகிறது? என்ற கேள்விகள் எழுந்துள்ள முக்கிய தருணத்தில், காங்கிரஸ் கட்சியின் சார்பில் அமைச்சராக உள்ள உயர்கல்வித் துறை அமைச்சர் விசுவநாதன் அவர்கள் இப்படி கூறியிருப்பது,

அவரது கருத்தா?

அவர் சார்ந்த கட்சியின் கருத்தா?

அவருக்கு அமைச்சர் பதவி தந்த முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களது கொள்கை முடிவா?

என்ற சந்தேகங்களை ஏற்படுத்தும் கேள்விகளுக்கு இடந்தரும் நிலையில், அவரது பேட்டி அமைவது சரியானதல்ல. "ஊடகங்களில் தவறுதலாகப் போட்டுவிட்டார்கள்" என்ற சமாதானம் தொலைக்காட்சி - வீடியோ காலத்தில் எடுபடக் கூடிய தல்ல!

ஊழல் சாம்ராஜ்ஜியத்தின் உற்பத்திக் கூடாரமான 'நீட்' போன்ற தேர்வுகளில் உயிர்ப் பலி வாங்கும், கார்ப்பரேட், லஞ்ச லாவண்ய போக்குகளும், சி.பி.அய். விசாரணைகளும் நடப்பதால், ஒன்றிய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான், பதவி விலகவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் முதல் பொதுவானவர்கள் வரை கேட்டு வரும் நிலையில், தமிழ்நாட்டு உயர்கல்வித் துறையின் புதிய அமைச்சராகப் பொறுப்பேற்ற ஒருவர் இப்படித் தெளிவின்றி பேசுவதும், பின்னர் மறுப்பதும் சரியான தொடக்கமா?

வன்மையான கண்டனத்திற்குரியது!

'கொள்கைக் கூட்டணி இல்லை, பதவிக் கூட்டணிதான்'' என்றால், எப்படி வேண்டுமானாலும் பேசலாமா? தமிழ்நாட்டுக் கல்விப் புரட்சி வரலாறு தெரியாமல் இப்படி பேசுவது, வன்மையான கண்டனத்திற்குரியதல்லவா?

சமதர்மத்தின் குரல் ஒலிக்கவேண்டிய இடத்தில், மனுதர்மக் குரல் ஒலித்தால், தமிழ்நாடு ஒருபோதும் அதை ஏற்காது!

அவசர, அவசியம்!

முதலமைச்சர், உயர் கல்வி, பள்ளிக் கல்வித் துறை உள்ளிட்ட கல்வித் துறை பற்றிய தம் அரசின், திட்டவட்டமான கொள்கை நிலைப்பாட்டைத் தாமதிக் காமல் அறிவிக்கவேண்டியது அவசர, அவசியமாகும்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கண்டனம் தெரிவித்து உள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவது குறித்து, கலைஞர் நகர் பணிமனை, மற்றும் தியாகராயர் நகர் பணிமனை செயல் வீரர்கள் கூட்டம் கலைஞர் நகர் பணிமனையில் சென்னை மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்றசங்க பொதுச்செயலாளர் பெரம்பூர் த. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. இதில் கழக தொழிலாளர் அணி செயலாளர், பிடிசி. ஜி.செல்வராஜ், கழக தொழிலாளர் அணி துணை செயலாளர் பிடிசி வெ.பாலு ஆலோசனை வழங்கினர். உடன் பொருளாளர் எம்.பெருமாள், துணை தலைவர் ஆர்.கந்தன், எம்.சதீஸ்குமார் (தி.நகர்), பி.சுரேஷ் (ஆவடி) மற்றும் பணிமனை நிர்வாகிகள், கே.சதீஸ்குமார், சுதர்சன், சுபாஷ்குமார். சி.நந்த கோபால், அன்புமணி, சங்கரன், செல்வம், சங்கர், புருசோத்தமன், கே.வெங்கடேசன், தியாகராஜன்.கே, முரளி, கோபி, ஜோதி, திருவாசகம் மதிவாணன், பாண்டியன், எஸ்.ரமேஷ், ரவிராஜா, சசிக்குமார், ராமகிருஷ்ணன் அமல்ராஜ், ஜெயச்சந்திரன், ஏகாம்பரம், தமிழ்செல்வன், தனபால், தினேஷ், மோகன், செந்தில், சதீஸ்குமார், ரவி, தசரதன், பாக்கியராஜ் சீனிவாசன், அன்பு, ராஜரத்தினம், அழகர் சாமி துரை, பாபு, ரங்கராஜன் லஷ்மணன், ரமேஷ், செல்வகுமார், டேவிட், ஆனந், ஆறுமுகம், சித்தார்த் மற்றும் பலர் பங்கேற்றனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மு. அரங்கநாதன்

மே 30 (2004)

திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய காலம் தொட்டு கழகப் பணியாற்றியவர்.

திருவல்லிக்கேணி பகுதிக் கழகச் செயலாளராகவும் – தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்றவர்.

விலைவாசிப் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.